சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளைப்பற்றிய புத்தகங்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேரவையில் ஆற்றிய உரைகள் அடங்கிய புத்தகங்களெல்லாம் காணாமல் போய்விட்டிருக்கின்றன. ஆவணக் காப்பகத்திலும் சரி, கன்னிமாரா நூலகத்திலும் சரி, காணப்படவில்லை. எங்களைப்போன்ற புதிய உறுப்பினர்களுக்கு அந்தப் புத்தகங்களெல்லாம் அளித்தால் சட்டசபையிலே உரையாற்றுவதற்கு சிறப்பாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எந்தப் புத்தகங்கள் காணாமல் போயிருக்கின்றன என்று சொன்னால், உடனடியாக அதைக் கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இல்லையென்றால் புதிய வடிவம் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக புத்தகங்கள் காணாமல் போயிருக்கின்றன என்று சொல்வதைவிட, எந்தப் புத்தகம் என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று மாற்றுத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பெரும்பாலான உறுப்பினர்கள் உணவருந்த சென்றிருக்கிறார்கள். நானும் உணவருந்திவிட்டு வந்துவிட்டேன். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உணவு சாப்பிட்டுவிட்டாரா, இல்லையா என்பது தெரியவில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): அவர் கொஞ்சம் தாமதமாகத்தான் சாப்பிடுவார்.

திரு. சு. குணசேகரன்: உணவு சாப்பிட்டுவிட்டு வந்து பேசினால் பரவாயில்லை என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2011 செப்டம்பர் 14]

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எப்போதுமே தோழர்கள் கரிசனத்தோடு பேசுவார்கள். ஆனால், அதில் ஏதாவது ஒரு குறும்பும் இருக்கும். அதைப்போலதான் இப்போது மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய உறுப்பினர் கேட்கின்ற கேள்விக்கு நான் பதில் சொல்வதை அவர் விரும்பவில்லைபோல் தெரிகிறது. எனவே, இங்கிருந்து என்னை வெளியேற்றுவதிலே அவர் குறியாக இருக்கிறார் என்பதை நான் மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவர் சட்டமுன்வடிவின் மீது சுதந்திரமாகப் பேசிக் கொண்டிருக்கிறார். அதிலேயாவது தலையீடு இல்லாமல் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு) உங்கள் மானியக் கோரிக்கை மற்றும் நிதிநிலை அறிக்கையிலே பேசும்போது நீங்கள் தலையிட்டு பதில் சொன்னால் போதும் என்று நான் நினைக்கிறேன். (சிரிப்பு)*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தங்க. தமிழ்ச்செல்வன்): *மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய துறை சம்பந்தப்பட்டது. அதனால் அவர் பதில் சொல்கிறார். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறார். அதைக் கருத்தாகவே நான் ஏற்றுக்கொள்கிறேன். அவர் எனக்குக் கட்டளையிடுவதாக நான் கருதவில்லை. ஆனால், புத்தகங்கள் காணாமல் போகின்றன என்று இங்கே சொல்கிறார்கள். இங்கே ஆண்டு கொண்டிருப்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. எனவே இங்கே புத்தகங்கள் திருடு போவதற்கே வாய்ப்பில்லை. திருடுகின்றவர்கள் எப்பொழுதோ இந்த அவையைவிட்டு வெளியேறிவிட்டார்கள். எல்லாப் பொருள்களையும் காப்பாற்றக்கூடிய அரசாக புரட்சித் தலைவி அரசு இங்கே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் புத்தகங்கள் என்று குறிப்பிட்டுச்*